## கொலன்னாவ நகர சபை

## கொழும்பு மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொலன்னாவ நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

##### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பௌதீக இருப்பை உறுதிப்படுத்த முடியாத ரூபா 1,471,238 தொகையான தளபாடமும் பொருத்திகளும் மற்றும் ரூபா 27,494,904 தொகையான மோட்டார் வாகனமும் வண்டிகளினதும் மீதிகள் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 28,966,142 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 47,662,878 தொகையான நிலுவை நீர்க் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 194100173792765 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 190,920 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் ரூபா 52,133 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 138,787 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெறவேண்டிய ஆதனவரி ரூபா 1,328,889 தொகை கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்படாமையினால் பெறவேண்டிய ஆதனவரி மற்றும் ஆண்டின் வருமானம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொதுக் களஞ்சியக் கணக்கின் மீதி ரூபா 38,884,780 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 4,521,097 ஆனமையால் சொத்துக்கள் ரூபா 34,363,683 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

மீளாய்வாண்டில் சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்ட 04 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் பயன்பாட்டு புத்தகங்கள் / பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 42,660,142 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பெறவேண்டிய 03 கணக்கு விடயங்களுக்கும், செலுத்த வேண்டிய 02 கணக்கு விடயங்களுக்கும் உரியதாக முறையே ரூபா 811,678 தொகை மற்றும் ரூபா 3,851,124 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,662,802 தொகையான மீதியொன்று பலவருட காலமாக தீர்க்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170அ(2) ஆம் பிரிவு | 80,650,400 | நகர சபைக்கு அறவிட வேண்டிய சகர அறவீடுகளும் அறவிடப்பட்டு நகர சபையின் நிதியத்தில் செலவு வைப்பதற்காக தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் சபைச் செயலாளரின் பணியாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2017 மே மாதம் திகதியின்றிய உள்ளூராட்சி சுற்றறிக்கை இல. LGD/03/2017 | - | உள்ளூராட்சி நிறுவனங்களால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள், உருவாகுகின்ற இடங்களிலேயே வகைப்படுத்துவதற்கு பொதுமக்கள் செயற்படுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தும் 2017 யூலை முதல் திசெம்பர் வரை கழிவுப் பொருள் தளத்திற்கு போடப்பட்ட மொத்த கழிவுகளில் 88 சதவீதமும் கலப்புக் கழிவுகளாக இருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>(i) நிதிப்பிரமாணம் 571 | 158,498 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை இனங்கண்டு / தீர்த்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1985 மார்ச் 20 ஆந் திகதிய திசெ/01 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கை | - | நில அளவு விகிதத்தை விஞ்சியமை, அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக அறவிடப்படுகின்ற சேவைக்கட்டணங்களில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,677,933 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,999,809 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

**(அ) மக்கள் வங்கி (கொலன்னாவ) கணக்கு இல. 194100173792765**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 190,920 ஆகவும் வங்கிக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான மீதி 88,436 ஆகவும், காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வங்கி இணக்கக்கூற்றின் வங்கி மீதியில் பலவருட காலமாக முன்கொண்டுவரப்பட்ட (வங்கி வழு, நிதி மாற்றங்கள்) ரூபா 172,721 தொகை சேர்க்கப்பட்டிருந்ததுடன் ரூபா 70,237 தொகை அந்த மீதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட சீராக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் காணப்படவில்லை.

**(ஆ) மக்கள் வங்கி (கொலன்னாவ) கணக்கு இல. 194100153792766**

1993 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,000 தொகையான நிதி மாற்றங்கள் மற்றும் குறிப்பாக காலத்தை கண்டறிய முடியாத தேறாத ரூபா 10,104 தொகையான காசோலை வங்கிக்கூற்றின் மீதியில் சேர்ப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 74,620,000 | 83,379,116 | 75,566,342 | 43,887,616 | 68,515,000 | 62,750,199 | 71,289,402 | 36,074,841 |
| வாடகை | 13,543,760 | 7,428,269 | 8,179,133 | 3,128,043 | 13,075,260 | 7,645,458 | 7,118,317 | 3,878,907 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 850,150 | 462,250 | 462,250 | 43,450 | 720,100 | 396,750 | 395,500 | 43,450 |
| ஏனைய வருமானம் | 10,984,500 | - | 21,036,951 | - | 13,730,000 | - | 24,287,638 | - |

### 2.3.2 ஆதன வரி

(i) முன்னைய ஆண்டின் நிலுவை ஆதனவரி, நடப்பாண்டின் ஆதனவரி சிட்டையிடல் மற்றும் தண்டப்பணக் கட்டணங்களை உள்ளடக்கிய அறவிட வேண்டிய ரூபா 117,630,123 தொகையினால் ஆண்டில் ரூபா 71,615,687 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிட வேண்டிய மீதி மொத்த ஆதனவரி வருமானத்தில் 39 சதவீதமாகும்

(ii) ரூபா 50,000 ஐ விட கூடுதலான நிலுவையாக இருந்த அரசாங்க மற்றும் தனியார் துறையின் ஆதனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 23,589,748 ஆகும். இந்த நிலுவை அத்திகதியில் காணப்பட்ட மொத்த நிலுவையில் 65 சதவீதமாகும். சபையினால் இந்த நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

**(அ) கடை வாடகை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நவீன சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள 37 மொத்தக் கடைகளிலிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 157,800 ஆகும்.

**(ஆ) வீட்டு வாடகை**

சபைக்குரிய 02 வீடமைப்புத் தொகுதிகளில் அமைந்துள்ள 15 வீடுகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 670,095 ஆகும். சபையினால் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு அந்த நிலுவைத் தொகையில் ரூபா 155,425 தொகை அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கைவிடப்பட்ட இலக்குகள்

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 9,722,980 தொகையான 16 வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

#### (ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

(i) 2007 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவ விதிகளுக்கு சபை இணங்கியிருக்கவில்லை.

(ii) சபையினால் முத்துராஜவெல கழிவுப்பொருள் தளத்திற்கு கழிவுப்பொருட்கள் தெரிவு செய்யப்பட்டு கொண்டு போடப்படாமையின் காரணமாக 2017 யூலை 01 முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய கலப்பு கழிவுப்பொருள் 01 தொன்னுக்கு ரூபா 2,300 வீதம் ரூபா 14,277,328 தொகை மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட மேல் மாகாணத்தின் 2008 இன் 01 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ விதிகளின் 2 ஆவது அத்தியாயத்தின் 18(1) இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுபவைகளுக்கு மேலதிகமாக கழிவுப்பொருட்களை வீட்டுக் வீடு சேகரிக்கும் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்காக மாதாந்த கழிவுப்பொருள் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை எல்லைக்குள் ஆதனவரி உரித்தான 8707 வியாபார நிலையங்களில் இருந்து அறவிட வேண்டிய ஆகக் குறைந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்படுமாயின் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,448,400 தொகையான வருமானமொன்றை பெற முடிந்திருக்கும்.

#### (இ) சுற்றாடல் பிரச்சினைகள்

2017 ஆம் ஆண்டின் போது அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கின்ற கழிவுப்பொருட்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியொன்றில் ஒன்று சேர்க்கப்பட்டு தெரிவு செய்து முத்துராஜவெல கழிவுப்பொருள் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. பின்னர் அந்தக் காணியை கைவிட்டு அதற்காக வேறொரு காணியொன்றில் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்ட போதிலும், முன்னர் காணப்பட்ட காணியில் குவிக்கப்படடிருந்த கழிவுப்பொருட்கள் முழுமையாக அகற்றப்படாமையின் காரணமாக இதுவரையில் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திராமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) சபையினால் 2017 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஒக்தோபர் வரையான கால எல்லையில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு, மாற்றங்களைச் செய்வதற்கு அல்லது பயன்பாட்டை மாற்றுவதற்காக நகரத்தில் வசிப்பவர்களால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 28 விண்ணப்பப் பத்திரங்களுக்காக 2018 செப்தெம்பர் 30 வரை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய பொது நூலகத்தினதும், 02 வாசிப்பு மண்டபங்களினதும் 2017 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 129,000 தொகையான பழுதடைந்த மற்றும் அகற்றப்பட வேண்டிய 1043 புத்தகங்கள் மற்றும் ரூபா 34,056 தொகையான மெய்மையாய்வின் போது காணப்படாத 164 புத்தகங்கள் என்பன காணப்பட்டதுடன் உரிய புத்தகங்களை அகற்றுவதற்கும், காணாமல் போன புத்தகங்களின் பெறுமதியை பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் களஞ்சியப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் மஜீட் பிரதேச சேவைத்தொகுதி, சேதவத்த பல் வாட்டு, சேதவத்த சிகிச்சை நிலையம் மற்றும் வதுல்ல வத்த உடற்பயிற்சி நிலையம் என்பவற்றில் உள்ள பொருட் பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் பொருத்திகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

(i) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பாக விபரம் பின்வருமாறு.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழயிர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகையான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பதவி நிலை | 05 | 03 | 02 | - |
| இரண்டாம் | 56 | 50 | 06 | - |
| ஆரம்ப | 291 | 310 | - | 19 |
| | 352 | 363 | 08 | 19 |

(ii) சபையின் செயலாளர் பதவிக்காக நிர்வாக சேவையின் III / II பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை வேறு சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் அந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக

நியமிக்கப்பட்டிருந்தனர். கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளிலும் வெற்றிடம் காணப்பட்டது.

(iii) சபையின் ஆரம்ப பதவிகளில் சேவையாற்றுகின்ற 310 ஊழியர்களில் 129 பேர் சுகாதாரத் தொழிலாளர்களாக இருந்ததுடன் அதில் 63 பேர் சுகாதாரப் பிரிவிற்குரித்தற்ற கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையினால் சுகாதாரத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 திசம்பர் 31 இல் உள்ளவாறு பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற 27 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,335,408 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 42 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 757,389 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 3,092,797 தொகை அறவிட வேண்டியிருந்தது. 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 1,490,110 தொகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

### பொது பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதலில் செயற்றிறனின்மை

15 வருடங்கள் அளவிலான காலத்திற்கு முன்னர் சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 20 குளிக்கும் இடங்களுக்குரியதாக மாதாந்தம் ரூபா 214,015 தொகை (வரியுடன்) நீர்க்கட்டணம் மற்றும் முன்னைய ஆண்டின் நிலுவை என்பவற்றை உள்ளடக்கி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47,662,877 தொகையான நிலுவை நீர்க்கட்டணப் பட்டியல் காணப்பட்டது. தற்போது வரையிலும் அந்த பொது குளிக்கும் இடங்களில் அநேனமானவற்றில் நீர்க்குழாய் வசதிகளுடன் வீடுகளிலும் வியாபார நிலையங்களிலும் வசிப்போரினால் பயன்படுத்தப்படுகின்றமையினால் சபையால் தேவையற்ற குளிக்கும் இடங்கள் மற்றும் நீர் வழங்கல்களை அகற்றுவதற்கு அல்லது முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் நகர சபையும் ஒன்றிணைந்து அமுல்படுத்திய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக சபையின் நிர்வாகச் செலவினங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகையில் ரூபா 95,000 தொகை சபையின் செயலாளர் மற்றும் தலைவரை உள்ளடக்கிய 18 உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள சபைக்குரிய 43 ஏக்கர் 2 றூட் 36 பேர்ச் அளவான தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற 28 ஆதனங்கள் தொடர்பாக சபையின் உரிமைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய உரித்துறுதி கையளித்தல் சான்றிதழ் சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் மானியமாக சபைக்கு கிடைத்திருந்த தஹம்புற சனசமூக மண்டபக் கட்டிடம் மற்றும் அதில் காணப்பட்ட பொருட்கள் மற்றும் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் சபையிடம் காணப்படாமையினால் நட்டங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 16 களஞ்சிய விடயங்கள் தொடர்பாக பின்காட் மீதிக்கும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு பெறுமதிக்கும் இடையே ரூபா 280,410 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 50 சதாவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான அசாதாரண முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 66 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8,039,539 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 71 செலவின விடயங்களுக்காக ரூபா 31,410,229 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 50 சதவீதத்தை விட கூடுதலாக செலவிடப்படாத தொகை ரூபா 23,404,332 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் சேகரித்தல் போதியளவில் இன்மை |
| | (ii) புதிய வாடகை மதிப்பீடு அமுல்படுத்தப்படாமை. |
| (ஆ) கணக்கீடு | கணக்குகளிலிருந்து கைவிடல், கணக்குகளில் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டமை |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற தேறாத காசோலைகளை காசாக மாற்றி தீர்க்கப்படாமை. |
| (ஈ) இருப்புக் கட்டுப்பாடு | இறுதியிருப்பு மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (உ) ஒப்பந்த நிர்வாகம் | கைவிடல் மற்றும் தாமதங்கள் காணப்பட்டமை |